Koviloor Digital Library


அன்னை மீனாட்சி அந்தாதி

அரு. சோமசுந்தரன்



Ac. NO: 4286
Q25

Koviloor Digital Library



Koviloor Digital Library

3-3

மணிவிழா அன்பளிப்பு



பொற்கிழிக்கவிஞர்

அரு. சோமசுந்தரன், M.A., B.T.

நீலா



12 - 8 - 96

வழங்குபவர் :

டாக்டர் ச. மெய்யப்பன்

மணிவாசகர் நூலகம்

சிதம்பரம், சென்னை, மதுரை, திருச்சி, கோவை

Koviloor Digital Library

பக்தி நெறி வளர்ப்போம்

பதிப்புச்செம்மல் டாக்டர் ச. மெய்யப்பன்

அரு. சோமசுந்தரம் பொற்கிழி பெற்ற முதல் கவிஞர். பக்தியும் தொண்டும் இரு கண்கள் எனக் கருதுபவர். தமிழ்ப்பணி அவர்தம் தலையாய பணி. கவிதை மண்ணில், விண்ணில், ஆற்றில், கடலில் என்னும் அவரது கவிதைப் படைப்புகள் அவர்தம் புலமை வெளிப்பாட்டின் அடையாளங்கள். சொல்லழகும் பொருளழகும் நடையழகும் தொடையழகும் மிகுந்த மரபுக் கவிதை களைத் தந்த மரபின் மைந்தராவார். இவர் பாடாத பொருள் இல்லை.

15,000-க்கும் மேற்பட்ட பாடல்களை இயற்றியவர். அருள்மணியம் என்னும் அருங்காப்பியம் இயற்றியவர். அன்னை மீனாட்சி அந்தாதியை அருள் ஒழுகப் பாடியவர். இது அவருக்குப் புகழ் சேர்த்த அந்தாதி. இது பலராலும் நாள்தோறும் பாராயணம் செய்யப்பெறும் சிறப்பினை உடையது நினைவாற்றல், அறிவாற்றல், பேச்சாற்றல் ஒரு சேரப் பெற்ற பெருமகனார். காசி-இராமேஸ்வரம் நடைப்பயணம், பழனி, திருச்செந்தூர், திருத்தணி நடைப்பயணத்தைப் பல முறை வெற்றி கரமாக நடத்தியவர். துலாவூர், பாதரக்குடி குரு பீடங்களில் பக்திப் பொழிவுகளும், இலக்கிய நிகழ்ச்சி களும், இடையறாது நடத்தி அவற்றால் பலர் பயன் பெறச் செய்தவர். நகரத்தார்களின் தலைமைக் குரு பீடமாகிய கோவிலூரில் திங்கள் தோறும் இலக்கியப் பொழிவினைச் சீரோடும் சிறப்போடும் நடத்தி வருபவர்.

செட்டி நாட்டின் செழுமைக்கும், சிறப்பிற்கும் செந்தமிழின் செழுமைக்கும் பக்திப் பயிர் தழைக்கவும், அல்லும் பகலும் ஓயாது உழைத்து வரும் உத்தமக் கவிஞர் தமிழ்ச்சான்றோர் அரு. சோ. மணிவிழா தமிழ் கூறு நல்லுலகத்துக்கும் அலைகடலுக்கு அப்பாலும் பல்லாயிரக் கணக்கான தமிழ் அன்பர்களால் மன மகிழ்ச்சியுடன் கொண்டாடப் பெறுகிறது.

உவகை உவகை உவகை

Koviloor Digital Library

அன்னை மீனாட்சி அந்தாதி

"பொற்கிழிக் கவிஞர்"
அரு. சோமசுந்தரன், M.A., B.T.

பொன்முடி பதிப்பகம்
காரைக்குடி

Koviloor Digital Library

பதிப்பு : 12, ஆகஸ்ட், 1996
திருவள்ளுவர் ஆண்டு : 2027
உரிமை : ஆசிரியர்க்கு
விலை : ரூ. 5.00

பொன்முடி பதிப்பகம்
123, முத்துப்பட்டணம் மூன்றாம் தெரு
காரைக்குடி- 630 001.

ஒளி அச்சு : லெட்சுமி லேசர், சென்னை 600 108 போன் : 580396

பாரி ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை 600 013.

Koviloor Digital Library

ஓதுவோம், உயர்வோம்

பதிப்புச் செம்மல் டாக்டர் ச. மெய்யப்பன்

தமிழ்நாட்டில் தொல்பழங்காலந்தொட்டு தாய் வழிபாடு சிறந்து விளங்குகிறது. மதுரை, காஞ்சி புகழ்பெற்ற சக்தி பீடங்கள். இறைவழிபாட்டில் தமிழ் மக்களுக்கு நீண்ட நெடிய மரபுண்டு. அன்னையிடம் அன்பும் அருளும் வேண்டித் தவங்கிடப்பர் மெய்த் தொண்டர். இறைவன் இறைவி புகழை எப்போதும் நினைந்து காதலாகிக் கசிந்து பாடுவர்.

மனம் ஒன்றி வழிபடுதற்கு தவஞானச் செல்வர்கள் இயற்றிய பக்திப் பனுவல்கள் துணைநிற்பன.

நெஞ்சு நெக்குருகி நினைந்து நினைந்து வழிபடுவோர் பெறும் பயன்கள் அளவிடற்கரியன. அருளாளர்களின் சொல்லோவியங்கள் வழிபடுவோர் நெஞ்சத்தில் உயிரோவியமாக்குகின்றன. அருட்கவிஞர்கள் இறைவியின் அடி தொடங்கி முடிவரை வருணிப்பது தமிழ் இலக்கிய மரபு. பாராயணம் செய்யும் பக்தர்கள் மனத்தில் அழகு ஒழுக இவ்வோவியங்கள் அமைந்து விடுகின்றன.

இவை மந்திரமொழிகள்.

அன்னை மீனாட்சி அந்தாதி, அந்தாதி இலக்கியத்தில் சிறப்பிடம் பெறுகிறது. இதன் ஆசிரியர் பொற்கிழிக் கவிஞர் அரு. சோமசுந்தரம். இவர் சிறந்த தமிழ்ப்புலவர். முறையாகத் தமிழ் பயின்றவர். பதினையாயிரத்திற்கும் மேற்பட்ட கவிதைகள் இயற்றியவர். அருள்மணீயம் என்னும் நாடகக் காப்பியத்தை இயற்றியவர். 100 நூல்களின் ஆசிரியர். பரமன் புகழ்பாடும் பக்தர். பக்திப் பயிர் வளர்க்கும் மெய்யடியார். தூய தொண்டால் உயர்ந்த வன்தொண்டர். வழிபாட்டிற்கு நடைப்பயணத்தை இயக்கமாக்கியர். ராமேஸ்வரம் முதல் காசி வரை நடைப்பயணம் மேற்கொண்டு வரலாறு படைத்தவர்.

Koviloor Digital Library

அன்னை மீனாட்சி அந்தாதி என்னும் இந்த நூல் 5 சிறப்புகளைக் கொண்டது.

1. பக்தி
2. கவிதைவளம்
3. எளிமை
4. அழகிய அந்தாதி அமைப்பு
5. திருமுறைச் செல்வாக்கு

ஆசிரியர் அன்னை மீனாட்சியின் அருளை வேண்டித் தவம் கிடக்கிறார். தான் உய்தி பெற தான் பட்டபாட்டையும் படும்பாட்டையும் கவிதை அழகோடு கூறுகிறார். இவர் வாழ்க்கை அனுபவங்கள் அங்கங்கே பளிச்சிடுகின்றன. பாத யாத்திரை மூலம் பரமனை வழிபடும் நெறியை வலியுறுத்துகிறார். திருமுறையில் ஆழங்கால்பட்டவராதலால் திருமுறைச் சொல்லாக்கம், சொல்லாட்சித் தொடர்கள் இந்த அந்தாதியில் பல இடங்களில் பளிச்சிடுகின்றன. முதல் பாடலின் இறுதிச் சொல்லும் அடுத்த பாடலின் முதல் சொல்லும் இயல்பாக அமைந்து நெட்டுருச் செய்வதற்கு ஏற்ற வகையில் சங்கிலித் தொடர்போல் அமைத்துள்ள திறம் போற்றுதற்குரியது. இந்தப் பக்திப் பனுவலைப் பாராயணம் செய்வதற்கு இவர் பயன்படுத்திய அந்தாதி யாப்பில் முற்றிலும் வெற்றி பெற்றுள்ளார்.

இந்த மாநிலம் பயனுற அன்னை மீனாட்சியிடம் வேண்டும் வரங்கள் பல. நாளும் ஓதுவோர் அதனைப் பெறுவர். அன்னை மீனாட்சியின் அருளுருவை, அருளாட்சியை இனிய தமிழால் பாடி உயிரோவியமாக்கியுள்ள பொற்கிழிக் கவிஞருக்குப் பொன்றாப் புகழ் தருவது இந்த அந்தாதி. ஓதுவோம், உயர்வோம்.

Koviloor Digital Library

அன்னை மீனாட்சி அந்தாதி

காப்பு

அன்னையே மீனாட்சி அந்தாதி நான்பாட
இம்மையே என்முன் எழுந்தருள்வாய்!- கண்ணையே
பாடும் இமைபோலப் பாடுகிறேன்; என்தமிழில்
நாடும் நயனத்தை நல்கு!

முதல் பத்து

ஆரா அமுதே என் அன்னாய்!
அருளாள் உலகம் ஆட்கொண்டாய்
பேரா யிரம்நீ பெற்றாலும்
பிரியம் என்மேல் உற்றாயே!
சீராய்ப் பேணிப் பாலூட்டிச்
சிறிய னுக்கும் தமிழூட்டித்
தேராய் நிற்கும் தாயே! நான்
1) தேரில் பொம்மை காப்பாயே!

காப்பாய் என்றே பலகாலும்
கடைக்கண் அருளால் வளர்கின்றேன்
தோப்பாய் வாழும் உலகத்தில்
தொண்டுக் குயில்கள் பரவட்டும்
ஏய்ப்பார் பெருகிப் போனார்கள்
இதயம் கிழித்தே எறிந்தார்கள்
தாய்ப்பால் அருந்தும் உலகத்தைத்
2) தாயே தினமும் கடைக்கண்பார்

Koviloor Digital Library

பார்த்துச் சலித்தே மறைந்தாயோ?
பகடைக் காயாய் உலகத்தைத்
தூர்த்தர் உருட்டும் நிலைகண்டே
தூணில் மறைந்தே நின்றாயோ?
வேர்த்துப் பாடும் புலவோர்கள்
வெறுத்தே ஓடக் கண்டே நீ
தீர்த்தங் களிலே கலந்தாயோ?
3) தீராப் பொறுமை கொண்டாயோ?

கொண்டாய் முத்தாம் கணவனையே!
கொழுந்தாய் என்றும் திகழ்கின்றாய்.
கண்டன் ஊரைக் கண்டவள்நீ
கன்றாம் உயிர்கள் பயிராக
வண்டாய் புதுவயல் கொண்டவள் நீ
வைகை மணலில் வாழ்ந்தவள் நீ
பண்டைப் பெருமை உனதென்றே
4) பழஞ்சங் கங்கள் பாடுதம்மா!

அம்மா! தாயே மீனாட்சி!
ஆண்டாய் நீயும் பலகாலம்
சும்மா இருந்தே இன்றைக்கும்
சுகங்கள் தந்தே காக்கின்றாய்
பெம்மா னுக்குப் பேரில்லை
பேசும் சக்தி நீயன்றோ!
சும்மா டேந்தும் மண்கூடைச்
5) சொக்கே சற்கும் தொழில்தந்தாய்!

தந்தாய் நல்ல பிள்ளைகளை
தமிழுக் கென்றே தந்தாயே!
பந்தாய் ஆடும் உலகத்தில்
பஞ்சாய் நஞ்சாய்ப் போகாமல்
சிந்தா மணியாய் வாழ்கென்றே
செயலுக் குருவம் தந்தாயே!
வந்தா ரெல்லாம் வாழ்த்திடவே
6) வளர்மா மதுரை நின்றாயே!

Koviloor Digital Library

A. No. 4286
Q25
நூலகம், கோவிலூர்
உ. கோவிலூர் KOVILOOR MADALAYAM மடாலயம்

நின்றாய் உன்றன் சந்நிதியில்
நெல்லின் மணிபோல் மானிடர்கள்
குன்றாய் வந்து குவிகின்றார்
கொட்டும் கண்ணீர் பொழிகின்றார்.
கன்றாய் நின்று கதறுவதும்
கைகள் கூப்பித் தொழுவதும்
மன்றில் உன்செவி விழவில்லையோ?
7) மலரும் உளத்தில் கனிவில்லையோ?

கனியும் பாலும் கற்கண்டும்
கன்னித் தமிழும் மாலைகளும்
தனியாய் மஞ்சள் குங்குமமும்
தாளில் வைத்துத் தொழுகின்றார்.
பனிபோல் வெள்ளை இதயத்தார்
பாடும் பாடல் கேட்கிலையோ?
சனியாம் ஏழரை பீடித்தால்
8) தாயே! அரண்செய் உயிர்காத்து!

காத்துக் காத்துச் சலித்தாயோ?
கடைக்கண் வீச்சை வெறுத்தாயோ?
பார்த்துப் பார்த்துன் சந்நிதியில்
பலநா ளாய்த்தவம் கிடந்தோர்கள்
பூத்துப் பூத்துப் போவதுமோ?
புன்கண் ணில்ஒளி தாரோயோ?
சேர்த்துச் சேர்த்து வைத்ததெலாம்
9) செந்தமிழ் அன்றி வேறிலையே!

இலையே எமக்கோர் இனித்தெய்வம்
எங்கள் தாயே! மீனாட்சி
கலையும் நீயே உலகத்தில்
கதியும் நீயே எங்கட்கு!
சிலையாய் இருந்தே போவாயோ?
செந்தமிழ் கேட்க வாராயோ?
தலையே தொழுதோம் வலம் வந்தோம்
10) தாயே! எமக்கருள் தாராயோ?

Koviloor Digital Library

இரண்டாம் பத்து

தாரா திருந்தால் தவிசுண்டோ?
        தண்டமிழ் பாடத் தடையுண்டோ?
நாரா யிருந்தோர் அனைவர்க்கும்
        நன்மா மலரே நீயன்றோ!
வாரா திருந்தால் வழக்குண்டோ?
        வற்றாப் புனலே! மாமணியே!
சீரா யிருந்தெம் கவிதையிலே
11)   சிந்தை குளிர்ந்தே சிரிப்பாயே!

சிரித்துக் கெடுப்பார் பலபேர்கள்
        தீண்டிக் கெடுப்பார் சிலபேர்கள்
அரித்துக் கெடுப்பார் ஆயிரம்பேர்
        அண்டிக் கெடுப்பார் பலகோடி
விரித்துக் கெடுப்பார் சிலநூறு
        வெறுத்துக் கெடுப்பார் பலநூறு
உரித்துக் கெடுப்பார் இங்குண்டோ?
12)   உலகத் தாயே! உரிப்பாயோ?

உரித்தால் வாழ வழியுண்டோ?
        உதிரக் கண்ணீர் வரலாமோ?
கரித்தால் அம்மா போக்குண்டோ?
        கடைக்கண் எம்மை நோக்காதோ?
சிரித்தால் தாயே! குறையுண்டோ?
        சினந்தால் தாயே! திறையுண்டோ?
தரித்தால் உயிரும் உன்னாலே
13)   தாயே! காப்பாய் மீனாட்சி!

மீனாள் என்றே உலகத்தார்
        மேவிக் கூவித் தொழுகின்றார்
கானாள் வேடர் முன்னேறிக்
        காளத்தி யானைக் கண்டாலும்
வானாள் தேவர் பூமிக்கே
        வந்தே நன்மொழி சொன்னாலும்
மேனாள் மூடர் கொள்ளார்கள்
14)   மேலும் உன்முனர் நில்லார்கள்.

Koviloor Digital Library

நில்லார் எல்லாம் போனார்கள்
நிலையாய் இருப்பதுன் அருளம்மா!
கல்லார் என்று தள்ளாதே
கதியார் என்று கேளாதே
பொல்லார் என்று போக்காதே
புரியார் என்று நீக்காதே
செல்லாக் காசுன் மடியேறும்
15) செகமே உன்னடி தொழுதேறும்

தொழுதே றும்எனில் பழுதுண்டோ?
தோற்றம் மாற்றம் உனக்குண்டோ?
விழுதே றிப்பலன் தந்தவளே!
வெற்றிச் சங்கம் கண்டவளே!
அழுதே உன்னைப் பெறலாமே.
அம்மா என்றால் வரலாமே.
கழுதே! என்றே வைவாயோ?
16) கண்ணே! என்றுரை பெய்வாயோ?

பெய்தால் உன்றன் சந்நிதியில்
பிணிமூப் போடு வறுமையெலாம்
எய்தா தோடிப் போகாதோ?
எங்கள் வாழ்வும் பூக்காதோ?
கைதான் கூப்பும் வேளையிலும்
கண்கள் பார்க்கும் காலையிலும்
மெய்தான் விதிர்த்துன் எழில்காண
17) மேவித் தானருள் செய்வாயே!

செய்வாய் என்றே இதுகாறும்
சேவித் தோர்கள் பலகோடி!
கைவாய்க் கென்றே போராடும்
காலம் ஆதலின் உனைச் சற்றுத்
தொய்வாய் விட்டார் இருந்தாலும்
தொழிலால் மறந்தோர் இருந்தாலும்
உய்வாய் என்றே கடைக்கண்ணால்
18) ஒருநே ரம்நீ அருளாயோ?

Koviloor Digital Library

அருளா திருந்தால் உய்வுண்டோ?
அருளிச் செய்தால் நைவுண்டோ?
இருளா யிருக்கும் பாதையிலே
ஏற்றம் போக்கும் போதையிலே
உருளா திருந்தால் உலகத்தார்
உண்மை வடிவம் காணாரோ?
சுருளா திருக்கும் பொய்ம்மையெலாம்
19) சுகமாய் ஆட்டம் போடுவதோ?

போடும் போலி வேடத்தால்
. புன்மை எங்கும் புகழாக
ஆடும் ஆட்டம் காண்கிலையோ?
அகமே கெட்டால் வாழ்வுண்டோ?
நாடும் பெரியோர் சான்றோர்கள்
நலிந்தே போனால் நாடுண்டோ?
காடும் பூக்கச் செய்பவளே
20) கண்கள் பூக்கச் செயல்நன்றோ?

மூன்றாம் பத்து

நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ அல்லற் படுவதுவே!
கன்றே என்றுன் மடிதாராய்.
கண்ணே என்றுன் மார்தாராய்.
சென்றே போன காலமெலாம்
செயலொன் றின்றிப் போனாலும்
இன்றே கலக்கம் போக்கிடவே
21) எழுந்தே விளக்கம் ஆக்கிடுவாய்.

ஆக்கல் காத்தல் அழித்தல்எலாம்
அம்மா உன்செயல் ஆனாலும்
நோக்கல் கூடா தென்றிமையை
நொடியும் திறவா திருப்பாயோ?
தாக்கல் நாற்றிசை வந்தாலும்
தடைகள் நாடொறும் தந்தாலும்
காக்கல் உன் இரு கண் அளியே!
22) கனிவும் உன்அருந் தண் அளியே!

Koviloor Digital Library

தண்ணளி யாலே இதுகாறும்
தாரணி ஓங்கச் செய்தவளே!
பெண்ணர சாளும் மங்கையரால்
பேரர சான பூமியிலே
விண்ணர சோங்கச் செய்தவளே!
வியனருள் ஓங்கப் பெய்தவளே!
மண்ணர சோங்கப் புரந்தந்து
23) மாதர சாகிப் பொலிவாயே!

பொலிவாய் வலிவாய் உலகத்தில்
போற்றும் அறங்கள் பூத்திடவே
தெளிவாய் வான்மொழி தந்திடுவாய்
தேறும் மானுடம் ஆகிடுவாய்
அளிவாய் பாடும் பூமாலை
அரன்வாய் பார்த்தே நின்றாலும்
துளிவாய் பாடும் எங்கட்கும்
24) துணிவாய் நாளும் நல்காயே!

நல்கா யானால் நாயகியே!
நாதம் உண்டோ நாவினிலே!
செல்கா தங்கள் பலகோடி!
சேவை செய்யத் துறைகோடி!
கொல்வா ரெங்கும் பலகோடி!
கோழை நெஞ்சம் பிறகோடி!
வெல்வா ருண்டோ நீயின்றேல்?
25) வீரம் ஈரம் உனதன்றோ!

உனதே ஐம்பெரும் பூதங்கள்
ஒண்ணித் திலமே! வாய்திறவாய்
எனதே எனதே என ஏங்கும்
ஈனப் பிறவித் துயரெல்லாம்
மனதே போடும் புள்ளிகளால்
மதிகெட் டிடுமோர் கோலங்கள்.
தனதே இல்லை என்பார்க்குத்
26) தடையே இல்லை தாயே வா!

Koviloor Digital Library

தாயே வாவா என்றாலும்
தமிழே வாவா என்றாலும்
நாயேன் சொல்லும் பாடலிலே
நாதம் உண்டோ என்பாயோ?
சேயேன் என்னிரு கண்ணுக்குள்
செந்தா மரையாய் வந்தவளே!
தூயேன் என்சிறு நாவுக்குள்
27) தொல்காப் பியமாய் வந்தவளே!

வந்தவ ளேஎன் வீட்டுக்குள்
வளர்பொற் கிழியாய் வாழ்பவளே!
கந்தனை என்றன் நயனத்தில்
கண்மணி யாகச் செய்தவளே!
வந்தனை கூறிப் பாடுகிறேன்
வளர்மலர் தூவித் தேடுகிறேன்
சிந்தனை எல்லாம் உனதன்றோ!
28) செயலெலாம் உன்றன் பரிசன்றோ!

பரிசுகள் தந்தாய் பலகோடி
பண்புகள் தந்தாய் பலதேடி.
வரிசையாய் நோயும் துன்பமெலாம்
வந்திட என்ன தவறிழைத்தோம்?
தரிசனம் தேடி வந்தவர்க்குத்
தறிசுகள் நிலமாய்த் தருவதுண்டோ?
பரிசுகள் தந்துன் அருள்மழையைப்
29) பாரகம் எங்கும் பொழிந்திடுவாய்.

பொழிந்திடு வானில் முகிலானாய்,
பூத்திடு கானில் அகிலானாய்.
அழிந்திடு விறகில் அக்கினி நீ!
ஆடிடு மேடையில் பொற்கிழி நீ!
இழிந்திடு மருவியில் தீர்த்தம் நீ!
இயலிசை நாடகம் அனைத்தும் நீ
வழிந்திடு பாலபி ஷேகத்தால்
30) வையயின் தாயே! வணங்குகிறோம்.

Koviloor Digital Library

நான்காம் பத்து

வணங்கிட மனிதப் பிறவியினை
வாழ்த்தொலி யோடு தந்தவளே!
சுணங்கிட என்ன காரணமோ?
சுகம்தர என்ன தாமதமோ?
அணங்கென உன்னைத் தொழுவதுவும்
அழுதிரு கண்கள் பொழிவதுவும்
குணங்களி கூரப் பாடுவதும்
31) கோபுர மாகக் கொழிதமிழே!

கொழிதமி ழாலே பூமாலை
கோத்திடு கின்றேன் பாமாலை
வழிபுனல் காவிரி வையையெலாம்
வறுமையில் என்இரு கண்தருமே!
ஒழிகெனப் போடும் முழக்கங்கள்
ஒண்டமிழ் வானில் இடியன்றோ!
வழிகளைக் காட்டி நடத்திடவே
32) வையையின் தேவி வாராயோ?

வாரா யோஎன வாடுகின்றேன்.
வறியேன் பிள்ளைத் தமிழ்கேட்டுத்
தாரா யோஎனத் தாழுகிறேன்
தனியேன் என்றன் தமிழுக்குள்
சேரா யோஎனச் சேவித்தேன்.
செகமே உன்றன் வீச்சுக்குள்
நாராய்ப் பூட்டிக் கண்ணசைத்தால்
33) நாயேன் ஒருநொடி தாங்குவனா?

தாங்க எனக்குத் திறமில்லை.
தரையில் நிற்கும் உரமில்லை.
வாங்கக் கொடுக்கும் கரமில்லை.
வாழ்ந்தே போக வரமில்லை.
ஓங்கத் தொழிலும் தரமில்லை.
உழைத்தே வாழ அறமில்லை.
ஏங்கத் தான் நீ வைப்பாயோ?
34) ஏச்சும் பேச்சும் துய்ப்பாயோ?

Koviloor Digital Library

துய்த்தேன் இத்தனை காலம்நான்
தொண்டுக் கோடித் துவண்டேனே
பொய்த்தேர் பின்னே போனதிலை
புகழ்த்தேர் என்றே பொங்கவிலை
உய்த்தேன் என்றொரு சொல்லுக்கே
ஊழிக் காலம் உன்னடியில்
கைத்தா எங்கள் போட்டிடுவேன்
35) கனிவாய் ஒருசொல் சொல்லாயோ?

சொல்ஒரு கோடி; பயில்கின்றேன்.
சுமைஒரு கோடி துயில்கின்றேன்.
அல்ஒரு கோடி ஆனாலும்
அறிவொரு கோடி போனாலும்
கல்ஒரு கோடி கண்டாலும்
கடையொரு கோடி நிற்பவனை
வில்ஒரு கோடிப் புருவத்தால்
36) விழிஒரு கோடி தருவாயே!

தருவா யேஎனத் தவிக்கின்றேன்
தழல்வா-யேதினம் கண்டஎனை
வெறுவா யோடு போகஎன
விடுவா யோஎனப் பொறுமுகிறேன்.
கருவா யோகம் துயின்றமுதல்
கடைவா யோகம் பயின்றவரை
வருவா யோகம் வரைந்தவளே!
37) வரமா யோகம் வார்ப்பாயே!

வார்ப்புகள் எத்தனை எத்தனையோ?
வளர்ப்புகள் எத்தனை எத்தனையோ?
சீர்ப்புகழ் பாடும் தேவாரம்!
சிந்தைகள் நாடும் வாசகங்கள்!
தேர்ப்புகழ் சொல்லித் திரிவதுவோ?
தேன்பிலி மலர்கள் விரிவதுபோல்
ஈர்ப்புகழ் இல்லா உலகத்தில்
38) எத்தனை காலம் திரிவதுவே?

திரிந்தது போதும் மலரவிடு
தேர்ந்தது போதும் வளரவிடு
அறிந்தது போதும் அகலவிடு
அளந்தது போதும் புகலவிடு
உரிந்தது போதும் உயரவிடு
உடைந்தது போதும் அயரவிடு
கறிந்தது போதும் கவரவிடு
39) கழன்றது போதும் சேரவிடு

சேரவே வந்துன் சந்நிதியில்
செங்கம லத்தாள் தொழுகின்றோம்
பாரமோ நாங்கள் உன்னடியில்
பாவமோ நாங்கள் செய்தறியோம்
சாரமோ இல்லை வாழ்க்கையிலே
சஞ்சல மோதினம் கொஞ்சமிலை
ஈரமோ நின்னிரு விழிக்கிலையோ?
40) இதயமோ தண்ணருள் துளிர்க்கலையோ?

ஐந்தாம் பத்து

துளிர்க்கவே வந்துன் தாள்தொழுதோம்.
தொண்டருள் எம்மைக் கூட்டுகண்டாய்
ஒளிக்கவே எண்ணும் உலமிதில்
ஒப்புர வாளர் இருப்பதனால்
களிக்கவே நெஞ்சுக் கிடமுண்டு
காத்தருள் இவரைத் தேடியம்மா!
விழிக்கவே செய்யும் பாமரரை
41) விருந்தென எண்ணிக் காத்திடுக!

காத்திடு தற்குக் கால்நடையாய்க்
கையிரு கூப்பிக் கண்சிந்திப்
பார்த்தொரு கோடி நிற்கின்றார்
படித்தொரு கோடி பரவுகிறார்,
வேர்த்தொரு கோடி வெதும்புகிறார்
விளக்கொரு கோடி ஏற்றுகிறார்
ஆர்த்தொரு கோடி எதிர்நின்றார்
42) அடைத்தொரு கோடி போட்டாயே!

Koviloor Digital Library

போட்டது தாயே ஆனாலும்
பொறுமையின் சிகரம் நீயேதான்.
கேட்டது தந்து காப்பாய் நீ
கேண்மையில் நல்ல தோப்பாவாய்.
பாட்டது கேட்டு நடைபோட்டுப்
பச்சிளங் குழந்தை ஆவாய் நீ.
வேட்டது தந்து வலம்தந்து
43) வெம்பகை போக்கி வினைதீர்ப்பாய்.

வினைகள் தீர்க்க வந்தவளே!
வெங்கொடு மைப்பிணி தீர்ப்பவளே!
கணைகள் எத்தனை வந்தாலும்
காலன் பத்தடி நின்றாலும்
புணையாய் நின்றெமை உயிர்பேணிப்
புண்ணில் மருந்தாய்க் காத்தவளே!
அணையா உலகில் அன்னாய் நீ
44) ஆதர வின்றேல் என்னாகும்?

என்னா கும்எனில் தெரியாதே.
எளிதா கச்சொல முடியாதே.
புன்னா கங்கள் மத்தியிலே
பூநா கங்கள் படம்காட்ட
இன்னா ரென்றே தெரியாமல்
இயல்பொன் றேதும் புரியாமல்
கன்னா பின்னா வாழ்வோர்க்குக்
45) கைகள் நீட்டிக் கரைசேர்ப்பாய்.

கரைகள் சேர்க்கும் கலங்கரையே!
கண்ணீர் விடுவோர் வழிகாட்டி!
உரைகள் இல்லை, பேச்சில்லை
ஊமை வாயர் என்றாலும்
திரைகள் உள்ளே விழிகாட்டித்
தினமும் காக்கும் தேவதையே!
அறைகள் உள்ளே ஆடுகிறோம்
46) அம்பலத் திற்கே அழைப்பாயே!

Koviloor Digital Library

அழைப்பாய் என்றே இதுகாறும்
அம்மா சேவை செய்தேமைப்
பிழைப்பாய் என்று பாராட்டிப்
பிள்ளாய் என்று தாலாட்டி
விளைப்பாய் என்று விரல்காட்டி
விருப்பாய் நல்ல மொழிகாட்டித்
தழைப்பாய் என்று தமிழ்காட்டித்
47) தந்தாய் நல்ல பொற்பேழாய்!

பேழைக் குள்ளே மாமணியே!
பேணிக் காக்கும் மங்கலமே
ஏழைக் கிட்ட திரவியமே!
இதயத் திற்குள் நவரசமே!
வாழைக் குலமாய்க் காப்பாயே!
வற்றாச் செல்வம் வளர்ப்பாயே!
தாழைப் பூவாய் மணப்பாயே!
48) தண்டமிழ் கேட்டுச் சிரிப்பாயே!

சிரிப்பைக் கேட்கும் வாய்ப்பிலையோ?
சிந்தைக் குள்ளே செல்வம்நீ!
உரிப்பாய் என்றே பகைவரெலாம்
உவப்பாய் வந்துன் முன்நின்றார்
குறிப்பாய் பாண்டியர் பாராட்டக்
கோபுர மாகி வளர்ந்தவளே!
விரிப்பாய் என்றே ஆணையிடின்
49) வேதம் என்மொழி ஆகாதோ?

ஆகா துண்டோ உன் அவையில்?
அன்றே பெரும்புகழ் நக்கீரன்
பாகாய் நன்மொழி பாடியதும்
பரம்பொருள் அவன்முனர் ஆடியதும்
சாகா வரம்தரு கதையலவோ?
சத்தியம் காக்கும் விதையலவோ?
நோகா திருக்கச் செய்தாயே!
50) நோய்நொடி நீக்கி உயிர்காப்பாய்!

Koviloor Digital Library

ஆறாம் பத்து

உயிரைக் காக்க வேண்டும்அம்மா!
உன்அருள் தனைஎது தாண்டும் அம்மா?
பயிரைக் காக்கும் முகிலானாய்
பழவினை போக்கும் உயிலானாய்.
வெயிலைத் தேக்கும் குடையானாய்
வெற்றி கொடுக்கும் படையானாய்
துயிலைப் போலொரு சுகமுண்டோ?
51) துணிவைப் போலொரு திறமுண்டோ?

உண்டோ எனஅருள் தேடுகிறோம்
ஓடி ஆடிப் பாடுகிறோம்
கண்டோர் யாரையும் காணவிலை
கற்றோர் பொருளுரை தேறவிலை
தண்டோ ராக்கள் போடுபவர்
தன்னிலை இன்னும் உணரவிலை
விண்டோர் உரைநீ விளம்பாயோ?
52) வீதி மணலில் கிளம்பாயோ?

கிளம்ப வேண்டும் தாயே! உன்
கீர்த்திப் பாமலர் தூவுகிறோம்
விளம்ப் நாவில் தெளிவில்லை
விழியில் பேரருள் துளியில்லை
அலம்பும் சிந்தனைத் தூளியிலே
அம்மா நீஇனும் தூங்குவதோ?
புலம்பும் என்மொழி கேளாயோ?
53) புராணம் என்றிதை ஏலாயோ?

ஏலா திருந்தால் எளியேனின்
இதயம் நிறைவதும் எப்போது?
காலாய் நீவரின் பாலையுண்டோ?
கனலாய் நீவரின் பனியுமுண்டோ?
கோலாய் நீவரின் கொடுமையுண்டோ?
கொம்பாய் நீவரின் வெம்பலுண்டோ?
தாலாய் நீவரின் தாழ்வுமுண்டோ?
54) தாயே! நீயருள் செய்வதென்றோ?

Koviloor Digital Library

என்றோ உன்மொழி செவிகேட்பேன்?
ஏலக் குழலிஉன் நடைபார்ப்பேன்?
நன்றோ நீஎமைச் சோதித்தல்?
நகைமுகம் இன்றிச் சாதித்தல்?
குன்றோ எமதுடல் பிணிவைத்தால்?
கொழிகட லோமனம் அலைவைத்தால்?
இன்றோ ரிடையூறு எமக்குண்டோ?
55) எல்லாம் உன்செயல் அம்மம்மா!

அம்மம் மாஎன அழுகின்றோம்.
அருவிக் கண்ணீர் பொழிகின்றோம்.
தும்மல் இருமல் வரும்போதும்
தொழில்கள் செய்தே எழும்போதும்
செம்மல் எனப்பிறர் சொலும்போதும்
சேவைக் கென்றே செலும்போதும்
அம்மா உனைத்தான் அழைக்கின்றோம்
56) அறியா திருப்பதா உன்நீதி?

நீதிக் கென்றும் துலையானாய்
நீசர்க் கென்றும் சிலையானாய்
ஊதிப் போடும் திறம் கொண்டாய்
உன்னைப் பாடும் வரம்கொண்டேன்
பாதிப் பின்றி நோய்நீக்கிப்
பலமும் எழிலும் பொருள்தந்து
சோதிச் சுடராய் ஒளிசெய்வாய்
57) சொல்மலர் தூவித் தொழுகின்றேன்

தொழுகின் றேன்நான் தினந்தோறும்
தோற்றம் நீஇனும் தரவில்லை
அழுகின் றேன்நான் கவிபாடி
அசரீ ரிஎதும் கேட்கவிலை
விழுகின் றேன்உன் சந்நிதியில்
விடைமேல் ஏறி வந்ததிலை
எழுகின் றேன்நான் உனதாணை
58) எனதிரு விழியும் நீதானே!

Koviloor Digital Library

நீதான் என்னைப் பெற்றிங்கே
நெடும்பய ணத்தில் விட்டாலும்
சாதா வாகிப் பதறாமல்
சக்கையு மாகிச் சிதறாமல்
சோதாவாகிப் பணியாமல்
சோடையு மாகிக் குனியாமல்
சூதால் வாழ்க்கையில் நலியாமல்
59) சுடரொளி யாகச் செய்தவளே!

செய்தவ ளேஉன் முகம்காட்டு
செந்தமிழ் பொழியும் வாய்காட்டு
பெய்தவம் பேணும் தாள்காட்டு
பேரருள் பொழியும் விழிகாட்டு
உய்தவம் செய்யும் வழிகாட்டு
உத்தம மாகும் மொழிகாட்டு
நெய்தவள் நீயே சிக்கலின்றி
60) நேர்த்தியாய் வாழ வழிகாட்டு

ஆறாம் பத்து

வழியினைக் காட்டத் தாமதமா?
வறுமையும் நோயும் வதைபடவே
விழியினைக் காட்டி அருள்செய்ய
விளக்கொளி காட்டி வாதாயே!
பழியிலா வாழ்க்கை கொடுத்தவளே!
பாத யாத்திரை விடுத்தவளே!
பொழிகரு ணைக்கோர் மேகம்நீ!
61) புதையருள் வேட்கும் தாகம்நான்.

தாகமாய்த் தேவிஉன் தாள்பணிந்து
தமிழமு தத்தில் தோய்ந்ததுவும்
வேகமாய் உன்பெருங் கோயிலுக்குள்
வேதம் முழங்கி வந்ததுவும்
ஆகமம் வாழும் சந்நிதியில்
அம்மா எனக்குரல் எழுப்பியதும்
சாகசம் என்றா எண்ணுகிறாய்?
62) சத்தியம் வாழும் நெஞ்சமிது!

Koviloor Digital Library

நெஞ்சமே கோயில் என்றாலும்
நித்தில மாய்நீ வாழுகிறாய்
கொஞ்சமோ உன்னைப் பாடியதும்
கோயிலில் வலமாய்த் தேடியதும்
தஞ்சமாய் உன்பதம் சூடியதும்
தமிழ்மறை கேட்டே ஆடியதும்
அஞ்சனம் எழுதிய கண்இமையே
63) அரைநொடி திறந்தால் தெரியாதா?

தெரியா ததுவும் இங்குண்டோ?
தென்னா டுடைய சிவன்தேவி
விரியா மலரால் மனமுண்டோ?
விளையாப் பயிரால் பலனுண்டோ?
தெரியா விழியால் ஒளியுண்டோ?
தெளியா அறிவால் வழியுண்டோ?
குறியாய் உன்னைச் சரணுற்றோம்
64) கோலக் கிளியே! மொழிபேசாய்

பேசாக் குமரன் குருபரனாய்ப்
பிள்ளைத் தமிழைப் பாடுகையில்
ஆசா பாசம் இல்லாநீ
அன்னைத் தமிழாய் அதை ஆக்கக்
கூசா மல்நீ தளர்நடையாய்க்
குழந்தை வடிவில் வந்ததெலாம்
ஆசா ரந்தான் என்றாலும்
65) அம்மா அக்கதை மீளாதோ?

மீளா ததுமோர் சரித்திரமா?
மேன்மக் களென எமையாக்கிக்
கேளாக் கவியெலாம் கேண்மையுடன்
கேட்டிடத் தளர்நடை இட்டுவரின்
தூளாய்க் கிடப்பவர் கவிதையெலாம்
தொல்காப் பியமாய் ஆகாதோ?
வாளாக் கிடப்பவர் வாழ்க்கையெலாம்
66) வையைப் புனலாய் வளராதோ?

Koviloor Digital Library

வளரா ததுமோர் பொருளாமோ?
வற்றாச் சுடரே! அருட்புனலே!
தளரா நெஞ்சம் தந்தவளே!
தமிழும் கொஞ்சம் தந்தவளே!
உளறா மல்நீ கிடக்கவென
உலகத் தார்பழி சொன்னாலும்
அலறா மல்நான் நிற்பேனா?
67) அம்மா வினமுகம் மறப்பேனா?

மறப்பேன் இந்த வையமெலாம்
மகனே! என்றெனை அணைப்பாயேல்.
துறப்பேன் சொத்துத் தொகையெல்லாம்!
தொடரும் பிறவித் துயர்நீக்கித்
திறப்பேன் தேவி! நீவாழும்
தெய்வக் கோவில் திருக்கதவம்!
''சுரப்பேன் அருளா ரமுதம்'' எனச்
68) சொல்லித் தாயே! வருவாய்நீ.

வருவாய் எனக்கு நீயேதான்
வையை நீரில் ஆடியதும்
உருவாய்த் தழலில் குழவியென
ஒரு நீமுன் தோன்றியதும்
குருவாய் வந்த குழந்தைக்குக்
கொற்கை முத்தைக் கொடுத்ததுவும்
கருவாய் வந்தது முதல்அறிவேன்.
69) கலைமா மதுரைக் கண்மணியே!

கண்ணே! மணியே! மீனாட்சி!
கலையே! அலையே! காமாட்சி!
விண்ணே! சுடரே! விசாலாட்சி!
வெயிலே! மழையே! நீலாட்சி!
பண்ணே! இசையே! பழந்தேவி!
பயிரே! உயிரே! பாண்டியர்கள்
பெண்ணே! அரசி! மீனாட்சி!
70) பேசா மடந்தை யாரம்மா?

Koviloor Digital Library

எட்டாம் பத்து

யாரைக் கண்டென் குறைசொல்வேன்?
யமுனைக் கரையான் தங்கையுனைக்
காரைப் பிழியும் சடைக்கற்றைக்
கங்கைக் கரையான் மணங்கொள்ள
வாரைக் கீறும் வளர்குரும்பை
வையைக் கரையான் ஆனதனால்
பாரைக்காக்கும் தாயேநான்
71) பாலக் கரையான் ஆகின்றேன்

ஆகின் றேன்நான் உன்னாலே
அச்சம் மிச்சம் எதுமில்லை
பாகின் நேர்மொழி இல்லையெனப்
பாட்டும் பெரிய தொல்லையென
ஏகின் தாயே! என்செய்வேன்?
என்னால் இயன்றதும் இதுதானே!
கோகி னூரின் வயிரங்கள்
72) கொட்டி அளக்க எனக்குண்டா?

உண்டா என்றதும் அம்மாநீ
உயரும் கோபுரம் காண்கின்றாய்
அண்டா வாங்கிட முடியாதான்
அலையை வாங்கிடல் எவ்வாறு?
மண்டா யிருந்தவன் விஞ்ஞான
மதியைப் பெற்றிடல் எவ்வாறு?
தொண்டால் உன்னைப் பெற்றிடவே
73) தொத்தித் தொத்திச் சோர்கின்றேன்

சோர்கின் றேன்எனைக் காப்பாற்றச்
சொக்கே சன்மனை வந்தவளே!
ஊர்கின் றேன்நான் சீர்காழி
உயர்சம் பந்தன் ஆகவிலை
தேர்கின் றேன்நான் யாவையுமே
திருநா வுக்கர சாகவிலை
ஆர்கின் றேன்நான் இல்லறமும்
74) ஆரூ ரன்பே றடையவிலை

Koviloor Digital Library

அடைய விலையே ஆனாலும்
அம்மா! உன்னருட் சோதிமுகம்
கடையேன் காண வழிசெய்தால்
கடைக்கண் பார்வை ஒளிசெய்தால்
படையே வரினும் எதிர்நிற்பேன்
பகையே உறினும் பணிசெய்வேன்
தடையே வரினும் தவறிழையேன்
75) தமிழே அறியச் சபதமிது!

இதுவும் அதுவும் எதுஒன்றும்
இயல்பாய் அறிய மாட்டேனை
மெதுவாய்த் தமிழால் மொழிஊட்டி
மேலாம் அருளால் அறிவூட்டிப்
பொதுவாய் திறமை கற்பித்துப்
பொழியும் புலமை சேர்ப்பித்துப்
புதுவாய் வந்தன காண்பித்துப்
76) போரா டத்தான் விட்டவளே!

விட்டவ ளேஎன் நற்றாயே!
வினைப்பய னாலே வாழ்க்கையிலே
பட்டதெ லாமினிப் போதாதா?
பாரம் சுமந்ததும் தீராதா?
கட்டங்க ளெத்தனை அதனாலே
கண்ணீர் வற்றிய தறியாயோ?
கொட்ட மடித்திடும் நோயாலே
77) கோழைக ளாவதும் சரிதானா?

சரிதா னாஎனக் கேட்டாலும்
சக்தியே! நான்உனைத் தொழுதா லும்
அரிதா கத்தான் வந்தபிணி
ஆட்டிப் படைத்திட அழுகின்றேன்
நரிதா னோஒரு பரியாக
நன்மா ணிக்க வாசகரால்
பெரிதா கத்தான் செய்தவளே!
78) பிணியை நீக்க முடியாதா?

Koviloor Digital Library

முடியா ததுமோ உனக்குண்டு?
முயலும் நாயை விரட்டிடுமேல்
செடியாம் பிணையைத் தூர்நீக்கிச்
சிதைக்கத் தேவி! அருள் செய்வாய்.
துடியாய் வாழும் உலகத்தில்
துவளும் கொடியாய் விடலாமா?
படியாய்க் கிடந்துன் பணிசெய்வேன்.
79) பச்சைக் கிளியே! பாலூட்டு

பாலூட் டித்தான் உயிர்காத்துப்
பழமூட் டித்தான் அருள்தந்து
தாலூட் டித்தான் தமிழ்தந்து
தரமூட் டித்தான் சால்பாக்கிச்
காலூட் டத்தைத் தந்தவளே!
கையா ரத்தான் உழைத்திடவே
மேலூட் டத்தைத் தந்தவளே!
80) மெய்ஞ்ஞா னத்தைத் தந்திடுவாய்

ஒன்பதாம் பத்து

தந்திடு வாயே மீனாட்சி!
தமிழ்மா மதுரைத் தாயேநின்
செந்திரு மேனி எழில்கண்டும்
செவ்வரி படரும் விழிகண்டும்
சிந்துரத் திலக நுதல்கண்டும்
சிரிப்பினை உமிழும் இதழ்கண்டும்
வந்தனை கோடி செய்யாமல்
81) வாழ்வதும் இங்கோர் வாழ்வாமோ?

Koviloor Digital Library

வாழ்வினை வாழத் தெரியாமல்
வையகம் தானும் புரியாமல்
சூழ்வினை ஏதும் செய்யாமல்
சொத்தினை ஈட்டி உய்யாமல்
கோள்நிலை நெஞ்சில் கொள்ளாமல்
கொள்கையும் சிறிது தள்ளாமல்
ஆள்நிலை கண்டும் அணுகாமல்
82) அன்னையே நின்பதம் சதமானேன்

சதமா னேன்நான் தாயேநின்
சத்திய விளக்கின் ஒளிஎங்கே?
பதமா னேன்நான் தாயேநின்
பாண்பா டுமிழும் மொழிஎங்கே?
மதமா னேன்நான் புகழாலே!
மாதா நின்திரு வடிஎங்கே?
விதமா னேன்நான் பலவாறாய்
83) வெற்றித் தாயே! காப்பாற்று

காப்பாற் றம்மா மீனாட்சி!
கலைமா மதுரைத் தாயேநான்
பூப்போட் டுன்னைப் போற்றுகிறேன்
பொற்றா மரைநீர் ஆட்டுகிறேன்
நாப்போற் றும்நான் கரந்தாலும்;
நடைபோ டும்கால் மறந்தாலும்;
பாப்போற் றும்நூல் பலயாத்தே
84) பாண்டியர் தேவி பதம்வைத்தேன்

Koviloor Digital Library

வைத்ததும் தாயே கொள்வாயோ?
வளர்பொற் றாமரைப் பொய்கையிலே
கைத்தலம் ஏந்தி விடுவாயோ?
கடைப்பெரும் சங்க காலத்தை
உய்த்ததும் வள்ளுவர் குறளம்மா!
உயர்திரு சங்கப் பலகையிலே
85) வைத்திடு வாய்என் கவிதைகளை,
வண்டமிழ்த் தாயிரு கையாலே!

கையா லேஎனை ஏந்தாயோ?
கனிவாய் உச்சி மோந்தம்மா
பொய்யா மறையெலாம் புகலாயோ?
பொழிகரு ருணைக்கண் நீராட்டிப்
பெய்யாத் திருவருள் பெய்யாயோ?
பேசா மொழியெலாம் பேசாயோ?
உய்யா மல்நான் போவேனோ?
86) உதையா யோநீ காலனையே!

காலனை வெல்ல வழியுமுண்டோ?
காத்திருந் தேஉயிர் கொள்வன்அவன்
பாலனை உண்ட முதலையிடம்
பாட்டினால் மீட்ட சுந்தரரும்
ஆளனைத் தீண்டிய அரவொழிய
அவனுயிர் மீட்டிய சம்பந்தர்
வாளர வால்வீழ் உயிர்எழவே
87) வாகீ சரும்பே ரருள்புரிந்தார்

Koviloor Digital Library

புரிந்ததோர் அற்புதக் கதையாவும்
புராணங்கள் கூறக் கேட்டதனால்
சரிந்திடும் ஆயுளை நீட்டிடவும்
சங்கடக் காலனை ஓட்டிடவும்
அறிந்ததோர் நல்வழி சரணமதே!
ஆதி பராசக்தி அருள்புரியே!
இரிந்திடக் காலனை ஒட்டிடுக!
88) இணையிலாப் பேரருள் கூட்டிடுக!

கூட்டிட வேண்டும் நல்லவரை
குறைத்திட வேண்டும் தீயவரை
வாட்டிட வேண்டும் வறுமையினை
வதைத்திட வேண்டும் நோயினையே
காட்டிட வேண்டும் நன்மார்க்கம்
கலைத்திட வேண்டும் துன்மார்க்கம்
பூட்டிட வேண்டும் பொறுமையினை
89) புதைத்திட வேண்டும் சிறுமையினை

சிறுமைகள் ஆடும் ஞாலத்தில்
செம்மைகள் ஓடும் காலத்தில்
பொறுமையின் உருவாய் வாழ்ந்திடவே
புகழ்திரு வாசகம் போற்றிடினும்
அருமையை உணர்ந்திடும் ஆளில்லை.
அன்பினை உணர்ந்திடும் நாளில்லை.
ஒருமையாய் உன்திருச் சந்நிதியில்
90) ஒண்டமிழ் பாடிப் பரவிடுவோம்.

Koviloor Digital Library

பத்தாம் பத்து

பரவிட என்றே நாதந்தாய்.
பாடிட என்றே மொழிதந்தாய்
கரவிடம் நெஞ்சில் கொண்டதனால்
காற்றிடம் கொண்ட உலகத்தில்
உறவிடம் இன்றித் திரிவோர்கள்
உன்னிடம் வந்தே சேர்ந்தாலும்
துறவிடம் கொள்ளா இதயத்தால்
91) தோற்றிடம் தந்தே துயர்தீர்ப்பாய்

தீர்த்திட வேண்டும் நோய்நொடிகள்
திளைத்திட வேண்டும் வாழ்துறைகள்
ஆர்த்திட வேண்டும் சன்மார்க்கம்
அழித்திட வேண்டும் ஊழல்எலாம்
பார்த்திட வேண்டும் அறவோரை
பகைத்திட வேண்டும் கரவோரை
ஈர்த்திட வேண்டும் அம்மாஉன்
92) இணையடி காட்டி இசைவிப்பாய்!

இசைத்திட வேண்டும் நல்வாழ்க்கை
இயலிசை நாடகத் தமிழ்த்தாயே!
அசைத்திட வேண்டும் புலனாசை
அடைத்திட வேண்டும் பொருளாசை
தசைத்திற னாலே பொறியின்பம்
தவித்திட வைக்கும் வேளையிலே
திசைத்திறம் எல்லாம் தெரிந்தஅருள்
93) தெய்வமே! காக்கத் துணைவருக!

Koviloor Digital Library

வருகவே தாயே! மீனாட்சி!
வளர்கரு ணைத்திறம் கொண்டவளே!
உருகவே உன்னைப் பாடியதும்
உன்திரு வாசலை நாடியதும்
பெருகவே மனநலம் ஓங்கியதால்
பிணிதரும் ஐம்பொறி தூங்கியதால்
அருகவே ஆசைகள் ஓய்ந்திடவே
94) அன்னையே! நின்னருள் தோய்ந்ததுவே!

தோய்ந்ததும் நின்திரு வருளாலே
தொடர்ந்ததும் நின்இரு விழியாலே
ஆய்ந்ததும் மறையெலாம் உன்னாலே
அடைந்ததும் நின்னடி தன்னாலே
காய்ந்தது போதும் கடைத்தேற்று
கனிந்தது போதும் முகம்காட்டு
தேய்ந்தது போதும் தெளிவூட்டு
95) திகைத்தது போதும் வழிகாட்டு

வழியினைக் காட்ட வேண்டும்அம்மா!
வையையின் நீரில் வளர்பவளே!
பழியினைக் கூட்டி உடம்பாக்கிப்
பகையினைக் கூட்டி நரம்பாக்கி
அழிவினைக் கூட்டி அறிவாக்கி
ஆடிடும் மாந்தர் பொய்ம்மையினை
விழியினைக் காட்டி வேரறுத்து
96) விதியினைக் காட்டும் அருந்துணையே!

Koviloor Digital Library

துணையே! தென்றல் காற்றானாய்!
தூயோய்! மணலில் ஊற்றானாய்.
புணையே! வாழ்க்கைப் பொருளானாய்.
புனலே! நெஞ்சத் தருளானாய்
இணையே இல்லா மானிடமாம்
ஏற்றப் பிறவி இதயத்தில்
அணையே போட்டுத் தாழாமல்
97) அம்மா! மானுடம் உய்விப்பாய்.

உய்விப் பாய்எனக் கூடுகிறோம்
உன்சர விளக்குகள் ஒளிசெய்யப்
பெய்விப் பாய்நல் லருள்மழையை
பெருநிலம் ஆண்ட மன்னவர்கள்
செய்வித் தார்பெருங் கோபுரங்கள்!
செந்தமிழ் ஆண்ட பாவலர்கள்
பெய்வித் தார்அருட் பாமழைகள்!
98) பிறந்தனை மதுரையில் தமிழாடி!

ஆடியும் ஆவணி சித்திரையும்
அழகிய மாசியும் வீதிகளாய்க்
கூடிய மாமது ரைத்தேவி!
கோபுரம் வான்முகில் தோய்ந்தவளே!
ஆடிய திருவிளை யாடலினால்
ஆலவாய் மண்ணில் அமர்ந்தவளே!
பாடிய தெழுகடல் உன்முன்னே!
99) பாற்கடல் அபிஷேகம் கண்முன்னே!

Koviloor Digital Library

கண்முன் னேதினம் விழாக்கோலம்
காண வருபவர் பலகோடி
பெண்முன் னேசிவம் அடக்கமெனப்
பேச வந்த அருட்சக்தி!
உன்முன் னேதினம் சந்நிதியில்
ஒண்டமிழ் பாடிப் பரவுகிறோம்.
பண்முன் னேநீ வந்திடுக!
பார்த்தால் அன்றிப் பசியாறா!

Koviloor Digital Library





Koviloor Digital Library

பொற்கிழிக் கவிஞர்
அரு.சோமசுந்தரம் இயற்றிய நூல்கள்

கவியரங்கில் கவிஞர் சோமசுந்தரன்
திருமுறைகள் வீட்டு நூல்
திருவள்ளுவர் பிள்ளைத் தமிழ்
பாண்டிமாதேவி (பொற்கிழி பரிசு பெற்ற காவியம்)
மறைமலை அடிகள் பிள்ளைத்தமிழ்
ஸ்ரீகுரு தட்சிணாமூர்த்தி பிள்ளைத்தமிழ்
கவிதை வானில்.....
கவிதை மண்ணில்.....
கவிதைக் கடலில்
கவிதை ஆற்றில்
கவிதை ஊற்றில்
அருள் மணியம்
கட்டுரைக் கற்கண்டு
கட்டுரைப் பெட்டகம்
கட்டுரைக் கற்பகம்
கட்டுரை இலக்கியம்
கட்டுரைக் கதம்பம்
கட்டுரை ஆய்வு
உயர்கல்வி தந்த உத்தமர்கள்
பெருந்தொழில் வளர்த்த பெரியோர்
வள்ளல் அழகப்பர்
பிரிட்டன்
பிரான்சு
ஜெர்மனி
சுவட்சர்லாந்து
மலேசியா
இராமேஸ்வரம் காசி நடைப்பயணம்